Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50
பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 100

திங்கட்கிழமை 06 மார்ச் 2023

மாசி 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயம் எதுவுமேயில்லை



## ஆணைக்குழுவுக்குள் ஒற்றுமையில்லை; நாடாளுமன்றமே முடிவு எடுக்கவேண்டும்

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 6

இந்த ஆண்டு தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பிலும், தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்தும் நாடாளுமன்றமே முடிவெடுக்கும் – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

»11

# தேர்தலைப் பிற்போட சதி நடவடிக்கையா?

## எதிரணிகள் ஆணைக்குழுவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுவதற்கான சதி நடவடிக்கைகளுக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவும் உடந்தையாகச் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எதிரணித் தலைவர்களால்

»11

# தலைவர் பிரபா உயிருடன் ஆதாரங்கள் விரைவில் வரும்

## மீண்டும் நெடுமாறன் தகவல்



சென்னை, மார்ச் 6

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருபதற்கான ஆதாரங்கள் கிடைத்தவுடன் அதை ஊடகங்களில் வெளியிடப்போவதாக உலகத் தமிழர் கூட்டமைப்பின்

»11




# மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம்!

யாழ்ப்பாணம், மார்ச் 6

நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனைக்குள் நுழையவேண்டாம் என்ற அறிவித்தல்

»11




### 9 நாள் முதல்வர்

# தமிழ் அரசு சார்பில் சிறில் களத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 6

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முன்னிறுத்தப்பட்ட மேயர் இ.ஆர்னோல்ட் இரண்டு தடவைகள் பதவியிழந்துள்ள

»11

# சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் மீனவர்களால் விரைவில் போராட்டம்

## யாழ்ப்பாணக் கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 6

இழுவைமடி தொடர்பான சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சை வலியுறுத்தி போராட்டத்தை நடத்துவதற்கு வடக்கு மீனவர்கள் தீர்மானித்துள்ளனர். அத்துடன் இந்திய, தமிழக, இலங்கை அரசுகளுக்கு கடிதம் அனுப்பவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

»11

# வடக்கு மீனவர்களின் ஒற்றுமையை குழப்புபவர் அமைச்சர் டக்ளஸ்தான்

## மீனவப் பிரதிநிதிகள் பகிரங்க குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 6

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சுயநலத்துக்காக வடக்கு மீனவர்களைப் பிரித்தாளுகின்றார் - இவ்வாறு ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர்

»10

# எம்.பி.க்கள் ஒன்றாகத் தயார்: மீனவர்கள் ஒன்றாகுவீர்களா?

## சுமந்திரன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கு மீனவர்களுடைய பிரச்சினைக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் எல்லோரும் ஒன்றாக ஆதரவு வழங்கத் தயார். ஆனால், மீனவர்கள்

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாவில் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு





கிளிநொச்சி, மார்ச் 6
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதியில் வீட்டின் முற்றத்தில் புதைக்கப்பட்ட நிலையில் வெடிபொருள்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.
வீட்டின் முற்றத்தில் பச்சைநிற துணி ஒன்றினை அவதானித்த வீட்டின் உரிமையாளர் அதனைத் தோண்டியபோது வெடிபொருள்கள் இருந்துள்ளன. இதையடுத்து, விடயம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினார்.
தகவலுக்கமைய காணிப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் 2 கைக்குண்டுகள், 175 துப்பாக்கி ரவைகள் மற்றும் ஒரு மகஸின் ஆகியவற்றை மீட்டனர்.
குறித்த வெடிபொருள்கள் இறுதிப் போரில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அவை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

# காணாமலாக்கப்பட்டோருக்காக நிகழ்நிலை அருங்காட்சியகம்!

## உருவாக்குவதற்கு சர்வதேச மன்னிப்புச்சபை திட்டம்

**கொழும்பு, மார்ச் 6**
**இலங்கை உள்ளடங்கலாக தெற்காசியப் பிராந்தியத்தில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களை உள்ளடங்கிய நிகழ்நிலை அருட்காட்சியகம் ஒன்றை உருவாக்க சர்வதேச மன்னிப்புச்சபை திட்டமிட்டுள்ளது.**

இதுதொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும், அதற்கு முன்னரான இனக்கலவரங்களின் போதும் பெருமளவானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டனர். இவை ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச கட்டமைப்புக்கள் மற்றும் உள்நாட்டில் நிறுவப்பட்ட விசாரணை ஆணைக் குழுக்களின் அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தமது உறவுகளைத் தேடி- நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்து வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.
இத்தகைய பின்னணியில் இயலுமானவரை தெற்காசியப்பிராந்தியத்தில் இடம்பெற்ற அனைத்து வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களையும் உள்ளடக்கிய நிகழ்நிலை அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
தெற்காசியப்பிராந்திய நாடுகளில் இந்த விவகாரம் தொடர்பில் பணியாற்றிவரும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இதற்கு இலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் சில அரச சார்பற்ற அமைப்புகளும் ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# சிறுமியொருவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 6
கிளிநொச்சி - அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் பகுதியில் சிறுமியொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. அதேபகுதியைச் சேர்ந்த ஜெயகாந்தன் தர்சிகா (வயது-15) என்ற சிறுமியே சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-10)

# கசிப்பு வைத்திருந்தவர் நிலாவரையில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 6
புத்தூர் - நிலாவரைப் பகுதியில் 15 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றது. அதேபகுதியைச் சேர்ந்த 58 வயதான சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)

# தேன் என்று சீனிப்பாணி

## மோசடிசெய்து விற்றவருக்கு மறியல்

வவுனியா, மார்ச் 6
சீனிப்பாணியை தேன் எனக்கூறி மோசடி விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா - காத்தான்கோட்டான் பகுதியிலுள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோதே இந்த மோசடி கண்டறியப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபரிடமிருந்து 55 போத்தல்களில் 41 லீற்றர் சீனிப்பாணி கைப்பற்றப்பட்டது என சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். சந்தேகநபரும் சான்றுப்பொருள்களும் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நெளுக்குளம் பொலிஸார் சந்தேகநபரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-110)



# யாழ். போதனாவுக்கு இன்சுலின் மருந்துகள்

## நேயம் பவுண்டேஷன் நன்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்துக்கு, 5 இலட்சம் ரூபா பெறுமதியான இன்சுலின் ஊசி மருந்துகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கையளிக்கப்பட்டன. சிறுவர்களின் தேவைக்காக நேயம் பவுண்டேஷனால் இந்த மருந்துகள் கையளிக்கப்பட்டுள்ளன.
மருத்துவமனையில் சிறுவர்களுக்கான நீரிழிவு இன்சுலின் ஊசி மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது என விடுத்த கோரிக்கைக்கமைய கனடா நாட்டைச் சேர்ந்த நேயம் பவுண்டேஷன் அமைப்பின் நிதியுதவியில் இந்த மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச)



# தெல்லிப்பழை மருத்துவமனையில் உடற்பருமன் எதிர்ப்பு வாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் உலக உடற்பருமன் எதிர்ப்பு தினம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.
உலக உடற்பருமன் எதிர்ப்பு வாரம் நேற்றுமுன்தினம் முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்றது.
அதற்கமைய இது தொடர்பான நிகழ்வுகள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் முன்னெடுக்கப்படவுள்ளன.
ஆரோக்கியமான உணவுப் பழக்கம், உடற்திணிவுச் சுட்டி அளவிடல் மற்றும் உடற்பயிற்சியின் நன்மைகள் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்பட்டன. நிகழ்வில் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி, மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வடக்கு கடலை இழக்கப்போகிறோமா?

கச்சத்தீவுத்திருவிழா நடந்து முடிந்திருக்கிறது. கொரோனாப் பெருந்தொற்றின் பின்னர் இம்முறையே வழக்கம்போல இந்திய- இலங்கைப் பக்தர்கள் ஆளணிக்கட்டுப்பாடு இன்றி கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு இருநாட்டு மீனவர்களும், பக்தர்களும் கச்சதீவு அந்தோனியாரை வழிபடக் கூடுகின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஒரு கலந்துரையாடலை நடத்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் திட்டமிட்டிருந்தார். ஆனால், அப்படியொரு பேச்சுக்கு செல்ல வடக்கு மீனவர்களின் பெரும்பாலானோர் சம்மதித்திருக்கவில்லை. 'இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படும்' என்று கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அறிவித்தமை பலத்த அதிருப்தியை வடக்கு மீனவர்களிடம் உண்டாக்கியிருந்த தருணத்திலேயே , கச்சதீவுக் கலந்துரையாடல் பற்றிய கதையாடல்கள் எழுந்திருந்தன. எனவேதான் வடக்கு மீனவர்கள், குறித்த பேச்சுக்கு செல்ல மறுத்திருந்தனர். கச்சதீவில் அரசியல் கலந்துரையாடலை நடத்த அனுமதிக்க வேண்டாமென ஆயர்களிடமும் மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கையை ஏற்று, கச்சதீவு ஆலய நிர்வாகத்தினரும், அங்கு அரசியல்ரீதியான பேச்சுக்களை நடத்தவேண்டாம் என ஒலிபெருக்கியில் பலமுறை அறிவித்தனர். ஆனாலும், தன்னோடு ஒரு சில மீனவர்களைக் கூட்டிச்சென்று தமிழக மீனவர்கள் சிலரோடு பேச்சுகளில் அமைச்சர் டக்ளஸ் ஈடுபடவே செய்தார். அப்படி வீம்புக்கு நடத்திய பேச்சில் உருப்படியான முடிவுகள் எதனையும் எடுக்கமுடியாதுதானே.


இப்போது பதிலுக்கு மீனவர்கள் வேறுவகையில் காய்நகர்த்தத் தொடங்கியிருக்கிறார்கள். கடற்றொழில் அமைச்சரை நம்பினால் நடுக்கடலுக்குள் மூழ்கவேண்டியதுதான் என்பது காலங்கடந்த பின்னரே அவர்களுக்கு உறைத்திருக்கிறது. அதனால் அமைச்சரைப் புறக்கணித்து, ஏனைய எம்.பி.க்களை ஒருங்கிணைத்து தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவுமாறு கோரியிருக்கிறார்கள். அத்தோடு ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளனர். இவை எல்லாமே சரியான நகர்வுகளே. ஆனால், இந்த நகர்வுகளுக்கெல்லாம் ஜனாதிபதி ரணில் கரிசனையெடுத்து, மீனவர் பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்குவாரா என்பது சந்தேகமே. ஏனெனில் என்னதான் டக்ளஸ் கடற்றொழில் அமைச்சராக இருந்தாலும், ரணில் போடும் தாளத்துக்கே ஆடிவருகின்றார். அப்படி ரணில் போட்ட வியூகமே, இந்திய மீனவருக்கும் வடக்கு கடலில் தொழில் செய்ய அனுமதி கொடுப்பதென்ற திட்டம். இந்தத் திட்டத்தினூடாக பல நன்மைகளை ரணில் தரப்பு அடையமுடியும். மிகநீண்டகாலமாக தீர்க்கப்பட முடியாதிருந்த மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதனூடாக இந்தியாவின் ஆதரவை இன்னும் அதிகரித்தல், வடக்குக் கடலில் மட்டுமே மீன்பிடி அனுமதியை இந்திய மீனவர்களுக்கு வழங்கி அவர்களையும், வடக்கு மீனவர்களையும் மோத விடல், அவ்வாறு தமிழக- வடக்கு மீனவர்களின் மோதல் தொடர்ந்தால் ஈழத்தமிழர்களின் பின் தளமாகவுள்ள தமிழக ஆதரவை படிப்படியாகக் குறைத்தல், ஆதரவற்ற தமிழர்களுக்கு அரைகுறைத் தீர்வைத் திணித்தல் என்று பல மாங்காய்களை, இந்திய மீனவர்களுக்கு அனுமதி என்ற ஒரேகல்லில் வீழ்த்த ரணில் நினைக்கிறார். அதற்கான கருவியாக கடற்றொழில் அமைச்சரைப் பயன்படுத்துகிறார். ஏனெனில், இப்படி இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கி, அதற்கு தாயக மீனவர்கள் பொங்கி எழுந்தால், "இரு பகுதி மீனவர்களும் தமிழர்கள், அனுமதி கொடுக்கப்பட்ட கடலும் தமிழர்களின் கடல், அனுமதி கொடுத்தவரும் தமிழர். எனவே இதில் நாம் எப்படி தலையிடுவது?" என்று ரணில் கைவிரிக்கவே அதிக சந்தர்ப்பம் உண்டு.

நல்லவேளையாக இந்தத் திட்டத்துக்குள் தாயகமீனவர்கள் சிக்கிக் கொள்ளாமல் விழித்துவிட்டார்கள். அதன் விளைவாகவே, கடற்றொழில் அமைச்சரை அப்பாலே தள்ளி வைத்துவிட்டு, ஏனைய எம்.பிக்களை அரவணைத்துச் செல்ல முயல்கிறார்கள். இந்த நகர்வை, வடக்குக் கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து போராடியபோதே எடுத்திருந்தால், இப்போதைக்கு ஓரளவுக்கேனும் தீர்வு கிடைத்திருக்கும். ஆனால், அப்போது அதைக் குழப்பியவர்கள் இதே மீனவர்களில் ஒரு பகுதியினரே. இனியும் அவ்வாறு தமக்குள் பிளவுறாமல், ஒன்றிணைந்து தொடர்ச்சியாகப் போராடினால் நிச்சயம் ஒருவழி பிறக்கும். அதைவிடுத்து , மீண்டும் மீனவர்கள் தமது சுயநலன்களுக்காக, பல அணிகளாகப் பிரிந்து, போராட்டங்களைக் குழப்பினால், இந்திய மீனவர்களின் இழுவைமடிகள் வடக்கு கடலெங்கும் பவனி வருவதைத் தடுக்கமுடியாமல் போய்விடும்.

### நாளொரு நல்வார்த்தை

நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே.

– நியேட்சே.




# தேர்தலைப் பிற்போடின் வன்முறையே ஏற்படும்!

## இந்து சமயப் பேரவை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 6

தேர்தலை நடத்தாது இழுத்தடிப்புச் செய்வதால் மக்கள் வெறுப்படைந்து வன்முறைக்குச் செல்லக்கூடும். ஆகையால் சரியான தீர்மானத்துக்கு அரசு வருவதே புத்திசாலித்தனமாகும் – என்று இந்து சமயப் பேரவை தெரிவித்துள்ளது.

இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவசக்தி கிரீவன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மக்கள் ஜனநாயக வழிமுறைகளையே விரும்புகிறார்கள் என்பதற்கு ஆழமான வலுவுள்ள பலசான்றுகள் உள்ளன. எனினும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளில் அரச இயந்திரம் செயற்படுகின்றபோது வேறு வழியின்றி வன்முறைக்குச் செல்கின்றமை கூர்ந்து அவதானிக்க வேண்டியுள்ளது.

தற்போது உள்ளூராட்சித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தாது போனமைக்கு பொருளாதார நெருக்கடியை காரணமாக்குவது அர்த்தமற்றது. பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதாகக்கூறி ஆட்சியைப் பிடித்த தற்போதைய அரசு தாம் கூறியதற்கு மாறுபாடாகச் செயற்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (ம)

# தென்னாபிரிக்காவின் அனுபவங்கள் நல்லிணக்கத்துக்குக் கைகொடுக்கும்

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

தென்னாபிரிக்காவில் முரண்பாடுகள் களையப்பட்டு ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்க செயற்பாடுகள் குறித்த அனுபவங்கள் எமது நாட்டுக்கு கைகொடுக்கும் என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் டாக்டர் நலேடி பண்டோவை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி புதுடில்லியில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் தென்னாபிரிக்காவில் கடந்த காலங்களில் இனங்களுக்கு இடையில் காணப்பட்ட முரண்பாடுகள் களையப்பட்டு ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்க அனுபவம் குறித்து பகிரப்பட்டது. அந்தப் பொறிமுறையை ஒத்தவாறாக இலங்கையிலும் கட்டமைப்பொன்றை ஸ்தாபிக்க நாம் கரிசனை கொண்டுள்ளோம். தென்னாபிரிக்காவின் நல்லிணக்க கட்டமைப்பு செயற்பாடு குறித்த விடயங்களை உள்ளடக்கியதாக எமது செயற்பாடுகள் அடுத்துவரும் காலத்தில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறு முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள் அர்த்தமுள்ளவையாக அமைவதற்கு தென்னாபிரிக்காவின் அனுபவம் எமக்கு கைகொடுக்கும் - என்றார். (ச-இ)

**நாளை** 07.03.2023 செவ்வாய்க்கிழமை மாசி 23

சுபநேரம் : 10.55 - 12.25

ராகுகாலம் : 03.25 - 04.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைகளிலும் வித்தகர்களாக மாணவர்களை உருவாக்குங்கள்!

## இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மார்ச் 6**

**மாணவர்களின் கல்வியை ஒரு குறுகிய வட்டத்துக்குள் மட்டுப்படுத்தாமல் அதைப் பரந்துபட்ட அளவில் வளர்த்துக் கொள்ளவேண்டும். இன்றைய உலகில் அதிகம் சம்பாதிக்கும் பட்டியலில் விளையாட்டு வீரர்கள் இருக்கின்றனர். இது பலருக்குத் தெரியாது என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணம் - உரும்பிராய் கற்பக இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்ற ஞானவைரவர் சமூக அறக்கட்டளை நிறுவனத்தின் ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்கால மாணவ சமூதாயத்துக்காக கல்வி, மொழி அறிவு, விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளை மேம்படுத்துவது மிகமிக அவசியமானதாக உள்ளது. வேலை வாய்ப்புக்கள் இல்லை என்கின்றோம். ஆனால், உண்மையில் வேலைகள் இருக்கின்றன. எங்கள் கல்விநிலை அதை நோக்கியதாக அமையவில்லை என்பதே உண்மை.

மாணவர்களின் கல்வியை ஒரு குறுகிய வட்டத்துக்குள் மட்டுப்படுத்தாமல் அதைப் பரந்துபட்ட அளவில் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

எனவே விளையாட்டுத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கேற்பவும் இளைஞர்களை நாம் வழிப்படுத்த வேண்டும் - என்றார். (ம-20)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். துணிச்சல் பிறக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். செலவுகளை சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். கவனமாக இருக்கவும்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். செல்லவும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். பணம் கேட்டு நச்சரிப்பார்கள். மனவருத்தம் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாள். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைப்பதில் பிரச்னை எதுவும் இருக்காது.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் வருகையால் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.


**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மனவருத்தம் தரும்.

# பேரன்பு கொண்ட அழகான வாழ்வு

கடவுளின் திருவுளத்தையும், திட்டத்தையும் புரிந்துகொண்டு செயற்படும் எவரும் கடவுளை எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு செய்வர். உலகம் பெருமை என்று கருதுகின்ற பணம், பதவி, பட்டம், சொத்து, அந்தஸ்து அனைத்தையும் குப்பையென்று கருதுவர். உயிரையே கடவுளுக்கு அர்ப்பணிப்பதில் தான் உண்மையான கடவுளன்பு இருக்கின்றது.

ஒருவரின் அன்பையும், பண்பையும், மனிதத்தையும், மனிதாபிமானத்தையும் வைத்து ஒருவர் உழைத்துவைத்த சொந்தங்களை அறியலாம். ஓடியோடி செல்வம் சேர்த்து வைப்பதிலும், படித்துப் பட்டம் பெற்று தலைக்கனம் பிடித்து அலைவதிலும் பெருமை இல்லை. பேரன்புகொண்ட வாழ்வே அழகானது. எங்கு அன்பு குறைகிறதோ அங்கு தவறுகள் பெரிதாகிவிடும். அன்பாலும், விசுவாசத்தாலும் நீ உழைத்துவைத்த சொந்தங்கள் என்றும் உன் துன்பத்திலும், துயரத்திலும் கூடவே கைகோர்க்கும். எந்தநிலையிலும் அடுத்தவரை மதிக்கும் குணத்திலும், பழகும் அன்பிலும், பண்பிலும் தான் உள்ளது நீ உயர்ந்தவனா? இல்லையா? என்பது.

இந்த நிலையிலிருந்து முழுமையான இறைஅன்பில் ஆளப்பட்டு நம் தனிப்பட்ட குறைகளிலிருந்து விடுபட்டு தூய ஆவியால் உடல், உள்ளம், ஆன்மா என்ற மூன்று நிலையிலும் புதுப்பிக்கப்பெற்ற மக்களாக நம்மைப் புதுப்படைப்பாய் மாற்றிட இந்தத் தவக்காலம் எம்மை அழைத்து நிற்கின்றது.




உடல் இச்சைகளுடனும், உலக ஆசைகள், கவர்ச்சிகளுடனும் உள்ள போராட்டத்தை தீவிரப்படுத்தி தனித்து நின்று செயற்பட்டு வறியோர், ஏழை, எளியோர், தேவையில் உள்ளோருக்கு உற்ற அயலானாய் இருந்து சொல், செயல், பார்வை, பொருளுதவி, நேரம் கொடுத்தல் போன்றவைகளால் பேரன்புகொண்ட தோழமைப் பகிர்வை மேம்படுத்துவோம். பிரிவு, பிளவு, காழ்ப்பு, பொறாமை, வீண் தீர்ப்பிடுதல், மன்னிக்காதிருத்தல் போன்ற பிறர் அன்புக்கு எதிரான தீய அம்சங்களை எம் வாழ்விலிருந்து அகற்றி அயலானோடு பேரன்புகொண்ட உறவோடு வாழ்ந்து எம் வாழ்வை அழகானதாக மாற்றுவோம்.

**திருமதி போ.சைலேந்தினி**
பாண்டியந்தாழ்வு

# கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு மிக அதிகளவான இந்திய உதவிகள்

## பிரதேச செயலர் பெருமிதம்



யாழ்ப்பாணம், மார்ச் 6

50 வீதமான நலிவுற்ற மக்கள் வாழ்கின்ற கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்திய அரசாங்கத்தில் உதவிகள் அதிகளவில் கிடைத்தன என்று கோப்பாய் பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் தெரிவித்தார்.

உரும்பிராய் கற்பக இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்ற ஞானவைரவ அறக்கட்டளை நிறுவனத்தின் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அரசால் யாழ்ப்பாண மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டபோது எமது பிரதேச செயலகப் பிரிவுக்கு சுமார் 22 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுகளை வழங்குவதற்கு அப்போதைய மாவட்டச் செயலரும் தற்போது விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமாக க.மகேசன் ஆவன செய்தார். அதை சுமார் 22 ஆயிரம் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்தோம்.

எமது பிரதேச செயலகப் பிரிவில் வாழ்கின்ற மக்களுக்கு பல தேவைப்பாடுகள் இருக்கின்ற நிலையில், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் உதவிகளைப்பெற்று இயன்ற அளவுக்கு அவர்களின் தேவைகளை நிவர்த்திசெய்து வருகிறோம். ஆகவே சமூக அறக்கட்டளை நிறுவனங்கள் தமது பிரதேசத்தில் தேவைப்பாடுகளுடன் வாழும் மக்களுக்கு தொடர்ந்து உதவிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-20)

# வடக்கில் இன்று சீரான காலநிலை

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கு மாகாணத்தில் இன்று சீரான காலநிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் சில பிரதேசங்களில் நாளை (இன்று) மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அதன்படி கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவுவேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் வடமத்திய மாகாணத்திலும் அடிக்கடி மழை பெய்யலாம் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வருடம் இதுவரையில்

# இலங்கைக் கடற்பரப்பில் 2,000 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதி வரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பரப்பில் 2 ஆயிரம் கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று வடமாகாண கடற்படைத் தளபதி அநுர தென்னக்கோன் தெரிவித்தார்.

கச்சதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்ற சம்பவங்களும் அவர்களைக் கைதுசெய்யும் சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 2 ஆயிரம் கிலோ கஞ்சா இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தியக் கடற்படையுடன் இணைந்து எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார். (ம-125)

# சுயாதீனமான நிறுவனங்களுடைய செயற்பாடுகளை உறுதிப்படுத்துக

## இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 6

இலங்கையில் மனித உரிமைகளையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கும் நீதிமன்றம் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை அரசமைப்பின் ஊடாக பாதுகாக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஐ.நா.விடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் உபகட்டமைப்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பில் மீளாய்வு செய்யும் மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் 137ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் ஆரம்பமாகியது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான மீளாய்வு எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதற்காக இலங்கை தொடர்பான அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கை அரசாங்கங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகவும், பிறிதொரு சட்டத்தின்மூலம் அதனைப் பதிலீடு செய்வதாகவும் தொடர்ந்து வாக்குறுதியளித்து வருகின்றபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் எந்தவித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

கடந்த ஆண்டு முன்மொழியப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்திருத்தங்கள், அந்தச் சட்டத்தின் ஊடாக நிகழ்த்தப்படும் தன்னிச்சையான கைதுகள், தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகளுக்கு உட்படுத்தல் உள்ளிட்ட மீறல்கள் தொடர்பில் உரியவாறான தீர்வுகளில்லை.

**“ மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளடங்கலாக மிகமோசமான அனைத்துச் சட்டங்களையும் திருத்தியமைக்குமாறு அல்லது முழுமையாக நீக்குமாறும், அதுவரையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரயோகத்தை நிறுத்துமாறும் இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா. வலியுறுத்த வேண்டும். ”**

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளடங்கலாக மிகமோசமான அனைத்துச் சட்டங்களையும் திருத்தியமைக்குமாறு அல்லது முழுமையாக நீக்குமாறும், அதுவரையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை நிறுத்துமாறும் இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா. வலியுறுத்தவேண்டும்.

மனித உரிமைகளையும், சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாக்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கும் நீதிமன்றம் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை அரசியலமைப்பின் ஊடாகப் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய வேண்டும்.

அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்படுவதுடன் அந்த உரிமை பாதுகாக்கப்படவேண்டும்.

அமைதிப் போராட்டக்காரர்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகித்த அனைத்து அதிகாரிகளும் உரியவாறான விசாரணைகள் மூலம் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

இவற்றை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக்குழு அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# எரிவாயு விலையில் மாற்றங்கள் இல்லை

கொழும்பு, மார்ச் 6

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதிலும், எரிவாயுவின் விலையை உயர்த்தப்போவதில்லை என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளபோதிலும் எரிவாயு விலையில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை என அதன் தலைவர் முதித்த பீரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போதுவரை இருந்த எரிவாயு விலை, அவ்வாறே தொடரும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வட்டி உயர்வால் பாதிக்கப்பட்ட கடனாளிகளுக்கு நிவாரணங்கள்

## மத்தியவங்கி ஏற்பாடு

அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வரிகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்தியவங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

அதிக வட்டி மற்றும் வரி விதிப்பால் கடன் பெற்றவர்கள் கடனை செலுத்த முடியாமல் சிரமப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவர்களுக்காக ஏற்கனவே இரண்டு புதிய சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு வங்கிகளில் இருந்து கடனை பெற்றவர்களுக்கு ஏதாவதுவொரு வகையில் நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் தொடர்பில் நாங்கள் செய்யவேண்டிய அனைத்து



வேலைகளையும் செய்துவிட்டோம். மிகவும் வெற்றிகரமாக முன்னேற சந்தர்ப்பம் கிடைக்கும் என நாம் எதிர்ப்பார்கிறோம் - என்றார். (ச-இ)

# கல்சியம் மாத்திரைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு இல்லை

## தேவிகா கொடிதுவக்கு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகளுக்கு எந்தவிதத் தட்டுப்பாடும் இல்லை என அரச குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரண்டு மாதங்களுக்குத் தேவையான கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் உள்ளன.

அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் தேவையான அளவு உள்ளது - என்றார். (எ-இ)

# இந்தியாவின் உதவிகள்தான் இலங்கையை வாழவைத்தன

## அலி சப்ரி உருக்கம்

கொழும்பு, மார்ச் 6

இலங்கைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உதவியமைக்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய அனைத்து நாடுகளும் சேர்ந்து செய்த விடயங்களைவிட இந்தியா - இலங்கைக்கு அதிகளவு உதவியுள்ளது. எங்கள் மீட்சி நல்லிணக்க நடவடிக்கைகளில் இந்தியாவே மிகப்பெரிய சகா. ஏனைய அனைத்து உலகநாடுகளும் இணைந்துகூட இந்தியா செய்த அளவுக்கு எங்களுக்கு உதவிகளை வழங்கவில்லை.

இந்தியா வழங்கிய 3.9 பில்லியன் டொலர் கடனுதவி, நாங்கள் மற்றுமொருநாள் வாழ்வதற்கான உயிரையளித்தது - என்றார். (ம)

# காணாமற்போனவர் சடலமாக மீட்பு

மஹாஓயா, நுவரகலதென்ன வனப்பகுதியில் சுற்றுலா சென்றிருந்தபோது காணாமற்போனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மஹாஓயா நீர் வழங்கல் சபையின் முகாமைத்துவ உதவியாளரான 34 வயதுடைய ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 3 ஆம் திகதி சுற்றுலா சென்ற 8 பேர் கொண்ட குழுவில் ஒருவர் காணாமற்போயிருந்தார். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், அந்த நபரின் சடலம் குழுவினர் இரவு தங்கியிருந்த இடத்துக்கு அருகிலுள்ள பாறையின் கீழ் பகுதியில் காணப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கல்லூரி பதில் அதிபர் தி.வதனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொண்டார். (ம-14)



மன்னார் பேசாலை சென்.பற்றிமா மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு, கல்லூரி அதிபர் எஸ்.கே.பிகிராடோ தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக 'மெசிடோ' நிறுவனத்தின் மன்னார் பணிப்பாளர் ஜே.யாட்சன் பிகிராடோ கலந்துகொண்டார். (ம-14-60)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, அண்மையில் நடைபெற்றது. பாடசாலை முதல்வர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளையின் செயலாளர் பிரமநாயகம் கலந்துகொண்டார். (ம-14)







சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ம-14-19)





கிளிநொச்சி - பூநகரி பிரதேசசபையின் இரணைதீவு உப அலுவலகத்துக்குட்பட்ட பொது நூலகத்தின் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆக்கத்திறன் மற்றும் ஏனைய சுயதொழில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் 'முத்தொளி' சஞ்சிகை வெளியீடும் இரணைதீவு உப அலுவலகத்தில் கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பிரதேசசபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் மற்றும் பிரதேசசபையின் அதிகாரிகள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினர். (ய-13)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்குமாகாண விவசாய அமைச்சின் நலன்புரிச் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் குருதிக்கொடை நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

வடக்குமாகாண விவசாய அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற குறித்த குருதிக்கொடை நிகழ்வில் விவசாய அமைச்சு மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (ய-20)

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு புதிய சப்பற வெள்ளோட்டம், கடந்த வியாழக்கிழமை காலை நடைபெற்றது. சிறப்பு மங்கள வாத்தியங்கள் முழங்க நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் வெள்ளோட்டம் இடம்பெற்றது. (ம-14-66)

## சாதனையாளர் கௌரவிப்பு

போக்கட்டி அ.த.க. பாடசாலையில் புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு, கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் புலமைப்பரிசில் சாதனையாளர்கள் மாலை மற்றும் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டியும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 19 மாணவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம-14-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
15 • 07 • 1948



மறைவு
05 • 02 • 2023

கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் சோமசுந்தரம் நாகம்மா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (05.03.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் புங்குடுதீவு கண்ணகைபுரம் தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (07.03.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**
**மகன் : சோ. கேதீஸ்வரன்** (ஈகிள் ஹாட்வெயார் - யாழ்ப்பாணம்)
**மகன் சோ. ஜெகதீஸ்வரன்** (சிற்றி ரான்ஸ்போட் - கொழும்பு)
**மகன் : சோ. பிரகதீஸ்வரன்** (சிற்றி ஹாட்வெயார் & ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)
**இல 87/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8678**

(CS 1234) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 • 08 • 1941



மறைவு
04 • 03 • 2023

## வேலுப்பிள்ளை நாகராசா

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி)

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (04.03.2023) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை செல்லாச்சி தம்பதிகளின் மகனும், பவளக்கொடியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், கேதீஸ்வரன் (ஆசிரியர்- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), அனுசா (அவுஸ்ரேலியா), ரேவதனி, வாசுகி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகிலா (ஆசிரியர்- நாவற்குழி மகா வித்தியாலயம்), முருகானந்தன் (பொறியியலாளர்- அவுஸ்ரேலியா), பிரணவன் (உதவிப்பதிவாளர்- பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மனோராஜ் ( மின் பொறியிய லாளர் இலண்டன்) ஆகி யோரின் மாமனாரும், கிருஷாந், லக்சயன் (மாணவர்கள்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), தணிகேசன் (மருத்துவர்-அவுஸ்ரேலியா), தாரணி (மருத்துவ பீட மாணவி- அவுஸ்ரேலியா), காயத்திரி (கலைப்பீட மாணவி- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) கஜானன் (மாணவன்- கொக்குவில் இந்துக்கல்லூரி), சோமியா, கபீசன் (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 205 0406**

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 • 02 • 1935



மறைவு
05 • 03 • 2023

## திருமதி விக்னேஸ்வரி கயிலேஸ்வரன் (மணி)

(சங்கீத பூஷணம்)

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி கயிலேஸ்வரன் நேற்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் செல்லம்மா தம்பதியரின் அருமை புதல்வியும், காலஞ்சென்ற கனகரட்ணம் நாகபூசணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கயிலேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கோணேஸ்வரி, சபாநாயகம் (அதிபர்), இராஜேஸ்வரி, கதிரவேற்பிள்ளை, திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.சுதாகரன் (France), சுதர்சன் (பாபுஜி IT Instructor), ரோகிணி (London), யாழினி (மதுரா-London) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெபிரகாஷனி (France), சிவகரன் (London), சதிஸ்வரன் (செல்வன்-London) ஆகியோரின் அன்பு மாமியாரும், யாழிசை, குழலிசை, ராஜேந்திரன், ஆர்த்திகா, அரவிந், மூகாம்பிகை, பிரணவன், வேலவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கணேஸ்வரனின் மைத்துனியும், திரு.திருமதி சிவப்பிரகாசம், திரு.திருமதி சோமசுந்தரம், திரு.திருமதி பரராஜசிங்கம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2023) செவ்வாய்க்கிழமை முற் பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் உரும்பிராய் கிழக்கு இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.44, ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**075 800 1707**

**தகவல்:**
**க.சுதர்சன் (மகன்)**

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
19 • 12 • 1962



ஆண்டவன் அடியில்
05 • 03 • 2023

## திருமதி அருந்தவராணி பற்குணராசா

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது மார்டீன் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவராணி பற்குணராசா நேற்று (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் கண்ணம்மா தம்பதியரின் மூத்த புதல் வியும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மரு மகளும், பற்குணராசாவின் ஆருயிர் மனைவியும், ரேகா (உப தபாலதிபர், தட்டையன் புலம்), பபிந்தா, அனுஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஷ்யந்தனின் அன்பு மாமியாரும், ஹர்ஷனாவின் ஆருயிர் அம்மம்மாவும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நந்தினிதேவி, சியாமளாதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரி யும், குணசேகரம், செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கைலாய நாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், அரியரெத்தினம், கமல தாசன் மற்றும் நகுலராசா ஆகியோரின் அண்ணியும், சறோஜினிதேவி, மங்கை (பிரான்ஸ்), அல்லிராணி ஆகியோரின் அன்புச் சகலியும், காலஞ்சென்ற இலட்சுமியின் பாசமிகு பெறாமகளும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம், ஆறுமுகம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2023) திங்கட்கிழமை மார்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**7ஆம் வட்டாரம், புங்குடுதீவு,**
**65/13, மார்டீன் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 297 5366**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1060) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.04.1947 | மறைவு 08.03.2020

திதி:- 06.03.2023

முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் (KKS)
முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ( வலிகிழக்கு)

**அமரர்**

**Lion வைரமுத்து சுப்பிரமணியம்**

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன்
உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி
தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர்சிறப்பிற்கும் வழிகாட்டி
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க
இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (CR 23788) 4-6

**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம் 21.05.1937 | மறைவு 05.02.2023

**அமரர் செல்வி மங்களேஸ்வரி வீரசிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

வீமன்காமம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் மங்களேஸ்வரி வீரசிங்கம் அவர்கள் கடந்த 05.02.2023 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசன் (ஆசிரியர் - அராலி), பரமேஸ்வரி (வவுனியா), யோகநாதன் (பொறியியலாளர் - SLT, யாழ்ப்பாணம்), அற்புதநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி (அராலி), கதிர்வேல்நாதன் (வவுனியா) மற்றும் நாகேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை கீரிமலையில் அமைந்துள்ள சிவபூமி மடத்தில் நாளை (07.03.2023) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி சாருமதி கிங்ஸ்லி விஜயநாதன்**
**பெறாமகள் (வவுனியா)**
**077 952 8451**

(CS 1201) 4-6

**திருமதி ஜெயபவானி சண்முகராசா**
**(யமுனா - அராலி)**
**மருமகள்**
**077 664 9005**

# மாதவிடாய் நாள்களில் ஊதியத்துடன் விடுமுறை

ஸ்பெய்னில் நடைமுறை

பெண்களுக்கு ஊதியத்துடன் மாதவிடாய் விடுமுறை அளிக்கும் முதல் ஐரோப்பிய நாடாக ஸ்பெய்ன் பெருமை பெற்றுள்ளது. ஸ்பெயின் நாடாளுமன்றத்தில் கருக்கலைப்பு மற்றும் திருநங்கை களின் உரிமைகள், பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகளுக்கான சட்டங்கள் தொடர்பான அமர்வில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பெண்கள் இந்தக் காலப்பகுதியில் உடல் ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ஆரோக்கியத்துக்கு இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## வேலையாட்கள் தேவை

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள போட்டோ கொப்பி மற்றும் லொத்தர்சீட்டு விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: 077 078 2395

## விற்பனைக்கு

தரமான **No1** சில்வர் பைப், சில்வர்தகடு, சில்வர் பட்டம் கம்பிவகைகள் மற்றும் பித்தளை, செப்பு, தகடுவகைகள் பித்தளை கம்பி, பைப் வகைகள் யாவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நந்தலாலா இரும்பகம்**
**29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 780 5950, 021 222 6234**

## வீடு வாடகைக்கு விடப்படும்

இடம்:- திருநெல்வேலி
வாடகை:- 25.000
T.P: 077 610 5771, 077 889 0464

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பகுதிநேர பணியாளர் தேவை. (மாலை 5.00 மணிக்குபின்)

**077 419 5015**

25.03.23

30th YEAR
The Gratiaen Trust
Since 1992

Jaffna
A DAY OF CREATIVE LITERATURE

Gratiaen Trust மற்றும் John Keells Foundation நிறுவனங்களினால் ஆக்க இலக்கியப் பகிர்வு மற்றும் கலை, இலக்கியம் பற்றிய உரையாடலினை உள்ளடக்கிய ஒரு நாள் நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 25.03.2023 சனிக்கிழமை அன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கான திறந்த நிகழ்வாகவும், இலக்கிய எழுத்தாளர்கள், மாணவர்கள் மற்றும் இலக்கிய வாசகர்களுக்கு உற்சாகமூட்டக் கூடிய ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும்.

### பயிற்சிப் பட்டறை

கருப்பொருள்: The Art of Detail
காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை முன்பதிவு செய்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே நுழைவு வழங்கப்படும்.

### இசையுடன் கூடிய கவிதை நிகழ்வு

பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரை; பொதுமக்கள் பார்வைக்கு அனுமதி இலவசம்.

### கலந்துரையாடல்

படைப்பாற்றல், உரையாடல், நெருக்கடி:
இலங்கையினைச் சேர்ந்த சமகால ஆங்கில இலக்கியம் மற்றும் கலைகள் பற்றிய ஒரு வட்டமேசை உரையாடல்.

பிற்பகல் 2.30 முதல் 4 மணி வரை; பொதுமக்கள் பங்கேற்கலாம்; அனுமதி இலவசம்.

### திறந்த ஒலிவாங்கி நிகழ்ச்சி

தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் வாசிப்புக்கள்
மாலை 4.15 முதல் 6 மணி வரை; ஆற்றுகையாளர்கள் முன் பதிவு செய்ய வேண்டும்; பொதுமக்களுக்கு இலவச அனுமதி.

நிகழ்ச்சிகள் பற்றிய முழுமையான விபரங்களுக்கும், சமர்ப்பணங்களைச் செய்வதற்கான விதிகளை அறியவும் www.gratiaen.com என்ற இணையத் தளத்திற்கு செல்லவும்.

இடம்: கலம், 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

IN ASSOCIATION WITH JOHN KEELLS FOUNDATION

VENUE PARTNER
Kālam | கலம்
a space for cultural encounters

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமாகின்றது இலம்பி உடன் தீர்வு தாருங்கள்!

## கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 6


இலம்பி நோயின் தாக்கத்தால் கிளிநொச்சியில் ஏராளமான கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த நோய் தொடர்பில் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டத்தின் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரால் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவு, கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவு மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவு போன்ற பகுதிகளிலுள்ள கால்நடைகள் இலம்பி என்னும் நோய் தாக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கால்நடைகளின் வாய்ப்பகுதியில் கொப்பளங்கள் ஏற்பட்டுள்ளதால் அவை மேய்ச்சலுக்கும் செல்ல வில்லை. உணவு எடுத்துக்கொள்ளவும் சிரமப்படுகின்றன.



இதனால் ஏராளமான கால்நடைகள் இறக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

எனவே அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இதற்கொரு தீர்வைத் தரவேண்டும்.

கடந்த வருடம் ஏற்பட்ட குளிர்கால நிலையால் பலநூறு கால்நடைகள் இந்தப் பகுதியில் இறந்து மடிந்தன. இதனால் பண்ணையாளர்கள் பல்லாயிரம் ரூபா இழப்பைச் சந்தித்தனர். இவ்வாறிருக்கையில் தற்போது அவர்கள் மற்றுமொரு துன்பத்தை இலம்பி என்ற இந்த நோய் வடிவில் எதிர்கொண்டுள்ளனர் - என்றனர். (ம-113)

## திருகோணமலை எண்ணெய்த்தாங்கி கட்டமைப்பை மீளச் செயற்படுத்துக!

### ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மார்ச் 6

திருகோணமலை எண்ணெய்த்தாங்கி கட்டமைப்பை மீண்டும் செயற்படுத்தி தேசிய பொருளாதாரத்துடன் இணைப்பதற்கான துரித வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கை ஐ.ஓ.சி. நிறுவனமும் இணைந்து கட்டமைக்கும் 61 எண்ணெய்த் தாங்கிகளைக் கொண்ட வளாகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை சென்றார்.

இதன்போது பல தசாப்தங்களாகப் பயன்படுத்தப்படாத திருகோணமலை எண்ணெய்த்தாங்கிக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தி, திருகோணமலை அபி விருத்தி வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தவேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அத்துடன் இரண்டாம் உலகப் போரின்போது குண்டுத் தாக்குதலுக்குள்ளான எண்ணெய்த்தாங்கி வளாகத்தையும் ஜனாதிபதி பார்வையிட்டார். (ச-இ)

## தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு நிவாரணமும் இல்லை

கொழும்பு, மார்ச் 6

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைப்பால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களைத் தாக்கல்செய்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவிக்கையில்;

தேர்தல் சட்டவிதிகளுக்கு அமைவாக தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதற்காக அரச பணியாளர்கள் சம்பளமில்லாத விடுப்பு எடுத்துள்ளனர். அவர்கள் தேர்தல் வேட்புமனு தினத்திலிருந்து தேர்தல் முடிவடையும் நாள் வரையில் சம்பளமில்லாத விடுமுறையைப் பெற்றுள்ளனர்.

ஆனால், தற்போது மார்ச் 9ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் தேர்தலை நடத்துவது தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கப்படவில்லை.

இதனால் குறித்த வேட்பாளர்களில் பலர் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர். தேர்தல் செயல்முறை தொடர்வதன் காரணமாக அவர்கள் மீண்டும் தொழிலுக்கு திரும்புவது தடைப்பட்டுள்ளபோதும் இந்த வேட்பாளர்களுக்கு நிவாரணமும் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## நாடாளுமன்றத்தில் உணவுக்கு மாதத்தில் ரூ.90 இலட்சம் செலவு

### பால், முட்டைக்கும் தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 6

நாடாளுமன்றத்தில் உணவுக்காக மாதாந்தம் சுமார் 90 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. அது தற்போது ஒருகோடியைத் தாண்டியுள்ளது என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின்சாரம், எரிவாயு மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளமை காரணமாக நாடாளுமன்றத்தில் உணவுக்கான செலவு 30 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உணவறையில் பால் மற்றும் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு உணவு விநியோகிக்கும் தரப்பினருக்கான கொடுப்பனவு வழங்கப்படாமையே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. (ச-இ)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 6

மாவை திருநாவுக்கரசு ஞாபகார்த்த இயற்கை விவசாயப் பண்ணையால், நடமாடும் சேவையொன்று பௌர்ணமி தினமான இன்று திங்கட்கிழமை நல்லூர் கோயிலின் மேற்குப் பகுதியில் மு.ப. 10 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இயற்கை விவசாயத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் இயற்கைவழியில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி மரக்கன்றுகளையும், இயற்கை பூச்சி விரட்டிகளையும், வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற ஊக்கித் திரவங்கள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் பயிர்ப் பைகள் மரக்கறி நாற்றுகளான கத்தரி, மிளகாய், தக்காளி, வெண்டி போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மருந்து இல்லையெனக்கூறின் பொலிஸில் முறையிடுங்கள்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 6

அரச மருத்துவமனைகள் அல்லது அரச மருந்தகங்களுக்குச் செல்லும் நோயாளர்களுக்கு மருந்து இல்லை எனத் தெரிவிக்கப்பட்டால் அதுதொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்குமாறு இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில்;

சுகாதார அமைச்சின் அசமந்த போக்கின் காரணமாக நாட்டில் இன்று மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் கடந்த மாதம் முறைப்பாடளிக்கப்பட்டது.

அதற்கமைய மனித உரிமைகள் ஆணைக்குழு சட்ட ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. எனவே எந்தவொரு நோயாளியும் அரச மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்களுக்குச் சென்று அங்கு மருந்து இல்லை எனத் தெரிவிக்கப்பட்டால் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளியுங்கள். இதுதொடர்பில் சட்ட உத்துழைப்பை வழங்குவதற்கும் நீதிமன்றத்தை நாடுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ச-இ)

## மாணவி துஷ்பிரயோகம்: பாடசாலை அதிபர் கைது

கொழும்பு, மார்ச் 6

பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொட - பின்னவல பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் 50 வயதுடைய அதிபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த அதிபர் தனது வீட்டுக்கு அருகில் வசிக்கும் 11 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயங்கர மோதலுக்குப் பின்

# ரஷ்யப் பிடியில் பக்முத் நகரம்!

**கீவ், மார்ச் 6**

**உக்ரைனின் பக்முத் நகரம் கடந்த இரண்டு மாதங்களாக நீடித்த கடும் போரின் பின்னர் ரஷ்யப் படைகளிடம் வீழ்ந்துள்ளது. இதனால், கிழக்கு உக்ரைன் ரஷ்யப் படைகளிடம் முற்றாகச் சென்றுவிடக்கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முனைப்புக்களை அடுத்து, உக்ரைனுக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்த ரஷ்யா அங்கு தற்போது தீவிரமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது.
கடந்த ஓராண்டாகியும் இந்தப் போர் ஓய்ந்தபாடில்லை. உக்ரைனுக்கு மேற்கத்தேய நாடுகளும் அமெரிக்காவும் தொடர்ச்சியாகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றமையால் உக்ரைனும் எதிர்த்துப் போராடுகின்றது. உக்ரைனின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்ற வேண்டும் என்பதே ரஷ்யாவின் முக்கிய மான நோக்கமாக இருக்கின்றது.
இந்த நிலையில், கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்ற கடுமையான போரின் பின்னர் உக்ரைனின் பக்முத் நகரம் ரஷ்யப் படைகளால் தற்போது கைப்பற்றப்பட்டுள்ளது. தொழில் வளம் மிக்க பக்முத் நகரம் கிழக்கு உக்ரைனின் முக்கியமான இடமாக இருக்கின்றது.
இதனால், பக்முத் கைப்பற்றப்பட்டமையால் கிழக்கு உக்ரைன் ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்படக்கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன. (ம)

# மூளையைத் தின்னும் அமீபா அமெரிக்காவில் ஒருவர் பலி!

வொஷிங்டன், மார்ச் 6
அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் மூளையை உண்ணும் அமீபாவால் பாதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
குழாய் நீரில் தனது முகத்தையும் மூக்கையும் கழுவிய ஒருவருக்கு தலைவலி ஏற்பட்ட நிலையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.
அவரைச் சோதித்ததில் அவரை அமீபா தாக்கியிருப்பது தெரியவந்தது. ஆனாலும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.
குறித்த நபர் குழாய் நீரில் முகத்தையும் மூக்கையும் கழுவியதால் மூளையை உண்ணும் அமீபா தாக்குதலால் அவர் உயிரிழந்துள்ளார் என சுகாதாரத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.
எனவே மக்கள் குழாய் நீரில் முகத்தை கழுவுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பணக்காரர்கள் பட்டியலில் மீண்டும் மஸ்க் முதலிடம்

வொஷிங்டன், மார்ச் 6
உலக பணக்காரர்கள் பட்டியலில் டெஸ்லா நிறுவுநர் எலான் மஸ்க் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.
கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் எலான் மஸ்க் 44 பில்லியன் டொலருக்கு ருவிற்றர் நிறுவனத்தை வாங்கினார். பின்னர் 50 சதவீத ஊழியர்களை நிறுவனத்திலிருந்து நீக்கி சர்வதேச அளவில் விமர்சனத்துக்குள்ளானார்.
அதனால் அவரது டெஸ்லா நிறுவனத்தின் பங்கு மதிப்பு சரியத் தொடங்கியது.
அதன்காரணமாக உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகித்து வந்த எலான் மஸ்கை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பிரெஞ்சு தொழிலதிபர் பெர்னார்ட் அர்னால்ட் பின்னுக்குத் தள்ளினார். இதனால் கடந்த இரண்டு மாதங்களாக உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் 2 ஆம் இடம் வகித்து வந்தார். தற்போது டெஸ்லா நிறுவனத்தின் பங்கு மதிப்பு 100 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், எலான் மஸ்க் மீண்டும் முதல் இடம் பிடித்துள்ளார். (ச-இ)

# பைடனுக்கு ஏற்பட்டிருந்த புற்றுநோய்க்கட்டி நீக்கம்!

வொஷிங்டன், மார்ச் 6
அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு ஏற்பட்டிருந்த புற்றுநோய்க்கட்டி அகற்றப்பட்டுள்ளது என்று வெள்ளை மாளிகை மருத்துவர் கெவின் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அமெரிக்க ஜனாதிபதி பைடனின் மார்புப் பகுதியில் புற்றுநோய்க்கட்டியொன்று இருந்தது. அந்தப் புற்றுநோய் பரவக்கூடியது அல்ல. இந்த நிலையில், அந்தப் புற்றுநோய்க்கட்டி தற்போது அகற்றப்பட்டுள்ளது. தற்போது பைடன் நலமுடன் உள்ளார் - என்றார்.
அடுத்த ஆண்டு நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் பைடன் மீண்டும் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 29.07.1938 மறைவு 05.03.2023

எமது கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் இணைப்பாளர் (நிதி நிரவாகம்)
**திரு.பா.பாலகணேசன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**திரு.இளையதம்பி பாலசிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**
(CS 10691)-6


### 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசி

# கண்டுபிடித்த விஞ்ஞானி மர்மமாகப் படுகொலை

மொஸ்கோ, மார்ச் 6
கொரோனாவுக்கு எதிராக ஸ்புட்னிக் வி தடுப்பூசியைக் கண்டுபிடித்த 18 விஞ்ஞானிகளில் ஒருவர் நேற்றுமுன்தினம் அவரது வீட்டில் மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கொரோனாவுக்கு எதிராக 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசியை ரஷ்யாவைச் சேர்ந்த 18 அறிவியல் விஞ்ஞானிகள் கடந்த 2020 ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர்.
அவர்களுக்குக் கடந்த 2021 ஆம் ஆண்டு ரஷ்ய ஜனாதிபதி புடின் நாட்டின் உயரிய விருதை வழங்கி கௌரவித்தார்.
இந்த நிலையில் அவர்களில் ஒருவரான ஆண்ட்ரி போட்டிகோவ் என்ற விஞ்ஞானியே நேற்றுமுன்தினம் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அவரை கழுத்தை நெரித்து கொலைசெய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அந்தநாட்டு பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)


## 28ஆம் ஆண்டு நினைவுகளில்



மண்ணில் 18.04.1942 விண்ணில் 14.02.1995

அமரர்
**தியாகராசா அரசரத்தினம்**
(இ.போ.ச.இளைப்பாறிய சாரதி, காரைநகர் டிப்போ)
திதி : மாசிமகம்

இருபத்தெட்டாண்டுகளாகியும்
ஈரவிழிகளின்னும் காயவில்லை
கோரம் கொண்ட காலன் செய்த
கோலமதால் அப்பா உங்களையிழந்து
காலமெல்லாம் தவிக்கிறோமே!

நினைவில் வாடும்...
**குடும்பத்தினர்.**
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
(CR 39395)1-6


### வடக்கு...

சமாசத்தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.
இலங்கையிலே மாறிமாறி பல இடங்கள் தாரை வார்க்கப்படுகின்றன. ஒரு சம்பவத்தை மறைப்பதற்காக இன்னுமொரு சம்பவத்தை அரசாங்கமே உருவாக்குகிறது. வடக்கிலுள்ள தமிழ் அமைச்சர் மேல் எமக்கு நம்பிக்கை இல்லை. அவர் எம்மைப் பிரித்து, தான் நினைத்தவற்றை சாதிக்கத் துடிக்கின்றார். இதனாலேயே நாம் நேரடியாக ஜனாதிபதியைச் சந்திக்க சந்தர்ப்பம் கோரி கடிதம் அனுப்பியுள்ளோம். வடக்கில் உள்ள 50 ஆயிரம் கடற்றொழிலாளர் குடும்பங்களின் பிரச்சினைக்கும் ஓர் அடித்தளமாக இந்தச் சந்திப்பு அமையவேண்டும் - என்றார். (அ-ஓ,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை...

தேர்தலுக்காக ஒதுக்கிய நிதியை விடுவிக்கப்படுவதற்கு முட்டுக்கட்டைபோடவேண்டாம் என்று உயர்நீதிமன்றம் இடைக்காலகட்டளை வழங்கியுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் பிரதிநிதிகள் உள்ள அதியுயர் சபையே நாடாளுமன்றம். எனவே, நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்தமுடியாது. நாடாளுமன்றத்துக்குச் சவால் விடுத்து எவரும் செயற்படமுடியாது எனவும் மீளவும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும். அதில் உள்ளவர்கள் இருவேறு திசைகளில் பயணிக்கின்றனர். அவர்களுக்கிடையில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை.

இந்த வருடம் தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் இல்லை. நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு தேர்தலை எப்போது நடத்துவது என்று நாடாளுமன்றம் முடிவெடுக்கும் - என்றார். (அ-ஒ.5,22)

## தமிழ்...

நிலையில், அந்தக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர் சொலமன் சிறிலை மேயர் வேட்பாளராக நிறுத்துவதற்கு நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் புதிய மேயர் தெரிவு எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் என்று வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் மார்ட்டின் வீதியிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக்காலை கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது சொலமன் சிறிலை மேயர் வேட்பாளராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் பிரேரிப்பதற்கு ஏகமனதாக இணக்கம் காணப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மேயராக இ.ஆர்னோல்ட் தெரிவானார். அவரது வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டன. அதனையடுத்து அவர் பதவியிழந்தார். புதிய மேயராக வி.மணிவண்ணன் தெரிவானார். அவரது பாதீடு தோற்கடிக்கப்பட்டது. மீண்டும் ஒரு தடவை பாதீட்டை முன்வைப்பதற்கான வாய்ப்பு இருந்தும் அவர் பதவி விலகினார். இதனையடுத்து மீண்டும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் இ.ஆர்னோல்ட் மேயராகினார். அவர் மீண்டும் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டமும் இரண்டு தடவை தோல்வியடைந்தது. அவர் மீளவும் பதவி விலகினார். புதிய மேயர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை - ஆர்னோல்ட் இரண்டாவது தடவை மேயராகத் தெரிவாகியமைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு நாளை விசாரணைக்கு மீண்டும் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5,125)

## தேர்தலைப்...

எழுப்பப்பட்டுள்ளது. தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிப்பதற்காக திறைசேரிச் செயலர் உட்பட சில தரப்புக்களுடன் நாளை கலந்துரையாடல் நடத்தப்படவுள்ள நிலையில், அவ்வாறானதொரு கலந்துரையாடல் நடத்தாமல் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் திகதியைத் தீர்மானிக்கலாம் என்று தெரிவித்து எதிரணிகள் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளன.

'சட்டப்படி தேர்தலை நடத்துவதற்கு இருந்த ஒரேயொரு தடையை உயர் நீதிமன்றம் இப்போது நீக்கியுள்ளதால், எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னதாக இந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டும். இது சம்பந்தமாக திறைசேரிச் செயலாளருடனோ வேறு எவருடனுமோ நீங்கள் (தேர்தல்கள் ஆணைக்குழு) கலந்துரையாடத் தேவையில்லை' என எதிரணித் தலைவர்களின் கையெழுத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மார்ச் 9ஆம் திகதி நடத்த வர்த்தமானியில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு வெளியிட்டது. அன்றைய திகதியில் நடத்தமுடியாது என்று குறிப்பிட்ட தேர்தல்கள் ஆணைக்குழு மார்ச் 3 ஆம் திகதி புதிய தேர்தல் திகதியை அறிவிப்பதாகக் குறிப்பிட்டது. அன்றைய தினம் உயர் நீதிமன்றத்தால், தேர்தலுக்கான நிதியை முடக்கி வைக்கவேண்டாம் என்று திறைசேரி செயலருக்கு இடைக்காலக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து திறைசேரி செயலர், பொலிஸ்மா அதிபர், அரசாங்க அச்சகம், பெற்றோலியக்கூட்டுத்தாபனம் என்பனவற்றுடன் கலந்துரையாடி புதிய தேர்தல் திகதியை நாளை 7 ஆம் திகதி அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் ஜூன் அல்லது அதற்குப் பிந்திய தினத்தில் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக எதிரணிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. இதற்கிடையில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றினால், தற்போதைய முறைமையில் தேர்தலை நடத்த முடியாது. புதிதாக வேட்புமனுக் கோரியே தேர்தலை நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே தேர்தலை இழுத்தடிப்பதற்கான சதித் திட்டத்துக்காகவே தேர்தல்கள் ஆணைக்குழு, திறைசேரி செயலர் உள்ளிட்ட ஏனைய தரப்பினருடன் சந்திப்பை நடத்த முயற்சிப்பதாக எதிரணிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. (அ-ஒ.5)

## தலைவர்...

தலைவர் பழ.நெடுமாறன் மீண்டும் தெரிவித்துள்ளதாக ஏ.என்.ஐ. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும், விரைவில் அவர் பொது வெளியில் வருவார் என்றும் நெடுமாறன் தகவல் வெளியிட்ட சில வாரங்களுக்குப் பிறகு அவரது அறிக்கை மீண்டும் வெளியாகியுள்ளது. (அ-ஒ.இ)

## சட்டத்தை...

வடக்கு மீனவர் சங்கப்பிரதிநிதிகளுக்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தவிர்ந்த வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாண நகரிலுள்ள விடுதியில் நேற்று இடம்பெற்றது. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் இறுதியாக எட்டப்பட்ட முடிவுகள் தொடர்பாக ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர் மூத்த விரிவுரையாளர் அகிலன் கதிர்காமர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்குவதை ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்திய இழுவைமடிப் படகுகளை அடிப்படையிலேயே எதிர்க்கின்றோம். இந்திய இழுவைமடி மற்றும் வெளிநாட்டுப் படகுகள் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கோரும் கடிதத்தில் வடக்கு மாகாணத்தின் அனைத்து மீனவ சமாசங்களும் கையெழுத்திட்டு இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் வழங்கவுள்ளோம்.

2016 ஆம் ஆண்டு இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கிடையே இடம்பெற்ற ஒப்பந்தத்தில், சூழலுக்குப் பாதிப்பாக அமையும் இழுவைமடிகளை நிறுத்தவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்து நாங்கள் அடுத்தடுத்த விடயங்களை மேற்கொள்ளவேண்டும். இன்று (நேற்று) கலந்து கொள்ளாத வடக்கு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த அறிக்கையில் கையொப்பமிடக் கூறுவோம். அவர்கள் கையொப்பமிடாத பட்சத்தில் அவர்களுடைய உண்மை முகங்கள் வெளிச்சத்துக்கு வரும். மேலும் மீனவர்களாலும் போராட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (அ-ஒ.125)

## எம்.பி.க்கள்...

எல்லோரும் ஒன்றாகப் போராடத் தயாரா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

வடக்கு மீனவ பிரதிநிதிகளுக்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ். நகரிலுள்ள விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்படி கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இழுவைமடி தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நாம் கடந்த காலத்தில் போராட்டத்தை நடத்தியிருந்தோம். ஆதரவு வழங்குவதாக அறிவித்த சில மீனவ சங்கங்கள் இறுதியில் காலை வாரின. இவ்வாறு வடக்கு மீனவர்களிடையே ஒற்றுமையின்மை காணப்படுகின்றது. மீனவர்களாக நீங்கள் ஒற்றுமைப்பட்டால் மாத்திரமே உங்கள் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும்.

இழுவைமடி படகுகளுக்கு எதிராகவும், வெளிநாட்டு படகுகள் எமது கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பதற்கு எதிராகவும் சட்டத்தைப் பிரயோகிக்குமாறு ஒரு போராட்டத்தை உங்களால் ஒற்றுமையாக நடத்தமுடியுமா? மக்கள் பிரதிநிதிகள் நாங்கள் ஒற்றுமையாக ஆதரவைத் தருவதற்குத் தயார்.

நீங்கள் ஒருமுனையில் போராட்டம் நடத்த அதற்கு எதிராக மறுமுனையில் இன்னொரு பகுதி மீனவர்கள் போராட்டம் நடத்தக்கூடாது.

ஜனாதிபதியைச் சந்தித்து அறிக்கையை வழங்கிய பின்னர் போராட்டம் நடத்தினால் அதன் பின்னரான சந்திப்புக்கள் பலமானதாக அமையும்.

இழுவைமடிகளுக்கு எதிரான சட்டத்தை கடற்றொழில் அமைச்சரே நடைமுறைப்படுத்தவேண்டும். அவர் இங்கே அதனைச் செய்கின்றாரா? உள்ளூரில் இழுவைமடி கடற்றொழிலுக்கு அனுமதி தேவை என்றால் அதனை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கவேண்டும். முதலில் உள்ளூர் இழுவை மடிகளை நிறுத்தினாலே இந்திய மீனவர்களின் இழுவை மடிகளைக் கட்டுப்படுத்தமுடியும் - என்றார்.

**நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்;**

இங்கிருக்கூடிய மீனவர் சமாசங்கள் சம்மேளனங்கள் ஒத்துழைப்போடு செயற்படவேண்டும். ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். இங்குள்ள இழுவைமடி தொழில் செய்பவர்களால் 'உரியவர்களுக்கு உரிய கவனிப்பு' செல்கின்றது. எனவே அவர்கள் இதனை தடுத்து நிறுத்தமாட்டார்கள். நாம் மக்கள் பிரதிநிதிகளாக உங்களுடன் எப்பொழுதும் இருப்போம். நீங்கள் ஒற்றுமையாக செயற்படுங்கள் - என்றார்.

**நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்;**

தமிழக மீனவர்கள் தொப்புள்கொடி உறவு என்பது வேறு. அதற்காக எமது மீனவர்களை பட்டினிச் சாவுக்குள் தள்ள முடியாது. இந்திய மீனவர்களுக்கு எமது கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது என்ற தீர்மானத்தை அனுமதிக்க முடியாது. இதனை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒப்பமிட்டு இந்தியாவுக்கு அனுப்பிவைப்போம். ஏற்கனவே பேச்சுக்களில் பங்குகொண்டு தீர்மானங்களை எட்டிய குழுக்களையே மீண்டும் பேச்சுக்கு அனுப்ப நாம் ஏற்பாடு செய்வோம். இழுவைமடி தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுப்போம் - என்றார்.

**நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்;**

இது கடற்றொழிலாளர்களின் பிரச்சினை மட்டுமல்ல. வடக்கில் வாழக்கூடிய அனைவரினதும் பொருளாதார பிரச்சினை. எந்தவொரு நாட்டிலும், வெளிநாட்டு மீனவர்களை அனுமதி கொடுத்து மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்கமாட்டார்கள். மாறாக தமது நாட்டுக்குள் நுழைவதற்கான தடைகளைத்தான் மேலும் மேலும் இறுக்கி வருகின்றார்கள். ஆனால், இங்கு அதற்கு எதிர்மாறாகச் செய்வதன் நோக்கம், எம்மையும் தமிழ் நாட்டையும் மோத வைப்பது தான் - என்றார்.

**நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்;**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராக இருந்து எதுவித நன்மையும் இல்லை. மீனவர் மோதல் நீண்டகால நிகழ்ச்சி நிரல். இன்று தமிழ் நாட்டு மீனவர்கள் தொழில்நுட்பரீதியாக அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ளார்கள். எங்களுடைய அரசு எங்களுடைய மீனவர்களுக்கு அந்தளவுக்கு வளர்வதற்கான வளங்களை வழங்கவில்லை - என்றார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், காதர்மஸ்தான், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. (அ-ஒ.125)

## மந்திரிமனைக்குள்...

தொல்பொருள் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது. அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் உள்ளது. அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப்பட்டுள்ளன. இதனால் அதற்குள் யாரையும் நுழையவேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா போன்று ரணிலும் நாட்டைவிட்டுத் தப்பியோடுவார்

## டலஸ் அணி உறுப்பினர் ஆரூடம்

கொழும்பு, மார்ச் 6
பிழையான தீர்மானங்களை எடுத்ததால்தான் கோத்தாபய ராஜபக்ச நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இது போன்ற நிலை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படும் என்று தெரிகின்றது- இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.
தெற்கு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியின்போது மேலும் கூறுகையில்;
உள்ளூராட்சிசபைத் தேர்தலும் பொருளாதாரப் பிரச்சினையும் ஒரே பிரச்சினைதான். தேர்தல் என்பது எமது அடிப்படை உரிமை. இதை அரசால் எந்தக் கட்டத்திலும் மீற முடியாது. பிழையான தீர்மானங்களை எடுத்ததால்தான் அந்தத் தலைவர் நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இதுபோன்ற நிலை தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என்று தெரிகின்றது.
இந்த அரசின் செயற்பாடுகளுக்கு மக்களிடம் வரவேற்பில்லை. அரசிடம் வாக்குப்பலம் இல்லை. அதனால்தான் அவர்கள் தேர்தலை ஒத்திப்போடுகின்றார்கள்.
சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் நிதி கேட்டுச் சென்றதன் பின்தான் பங்களாதேஷ் சென்றது. ஆனால், அவர்கள் முதலாவது தவணை நிதியைப் பெற்றுவிட்டார்கள். எமது விவகாரம் இன்னும் இழுபறியிலேயே உள்ளது.
இந்த அரசுமீது நாட்டு மக்களின் விசுவாசம் இன்மையே இதற்குக் காரணம். சர்வதேச உதவி கிடைக்க வேண்டும் என்றால் உள்நாட்டு மக்களும் சர்வதேசமும் நம்பக்கூடிய அரசு இருக்கவேண்டும். ஆனால், தேர்தலை ஒத்திப்போடப் போட, அரசு மீதான சர்வதேசத்தினதும் மக்களினதும் நம்பிக்கை குறையும்.
தேர்தலை ஒத்திப்போட்டால் தேர்தலைக் கேட்டு மக்களால் ஆர்ப்பாட்டம் செய்யமுடியாது. தாக்குதல் நடத்தப்படுகின்றது. அப்படியென்றால், மக்களின் உரிமையைப் பாதுகாக்க மக்கள் என்னதான் செய்வது? - என்று கேள்வி எழுப்பினார்.
(அ-ஒ.22)

# மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு!

## கட்டுவன்புலத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
கட்டுவன்புலத்தில் மின்சாரம் தாக்கி இளைஞன் நேற்றுமாலை உயிரிழந்துள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.
தெல்லிப்பழையைச் சேர்ந்த எஸ். மதுசன் (வயது - 18) என்பவரே உயிரிழந்துள்ளார். கட்டுவன்புலத்தில் வேப்ப மரத்தின் கொப்புகளை வெட்டும்போது பிரதான மின்வடத்திலிருந்து மின்சாரம் தாக்கியுள்ளது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது.
(ஒ-23)



# கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 6
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் 4 கிலோ கஞ்சாவுடன் 33 வயதான சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
(ஒ-26)

# ரின்மீன் கொள்வனவு: அவதானம் தேவை

## நுகர்வோர் அதிகாரசபை மக்களுக்கு எச்சரிக்கை

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற ரின் மீன்களைக் கொள்வனவு செய்யும்போது எஸ்.எல்.எஸ். என்ற இலங்கைத் தர நிறுவனத்தின் தரச்சான்றுஉள்ளவற்றை மாத்திரம் கொள்வனவு செய்யுமாறு நுகர்வோர் அதிகாரசபை பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. தரமற்ற உற்பத்திகள் தொடர்பில் முறைப்பாடளிக்க முடியும் எனவும் இலங்கை நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.
சந்தையில் உள்ள தரமற்ற ரின்மீன்கள் தொடர்பில் நுகர்வோருக்கு தெளிவுபடுத்துவதற்காக இலங்கை நுகர்வோர் அதிகாரசபை ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஊடக சந்திப்பில் வைத்தே அதன் தலைவர் அசங்க ரணசிங்க இதனைக் குறிப்பிட்டார்.
(அ-ஒ.இ)

# போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 6
கோப்பாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கோண்டாவிலில் இளைஞர் ஒருவரை 350 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் நேற்றுமாலை கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
கோண்டாவில் கிழக்குப் பகுதியில் உயிர்கொல்லி போதைமாத்திரைகளை இளைஞர் உடைமையில் வைத்திருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்துள்ளது. அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரான 24 வயது இளைஞனைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 350 உயிர்கொல்லி போதை மாத்திரைகளை மீட்டுள்ளனர்.
கைதான சந்தேக நபருக்கும் பொலிஸாருக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
(ஒ-125,26)


## தேவை

✔ மில்லிற்கு வேலையாட்கள் தேவை. (ஆண்/பெண்)
✔ கணினி அறிவுள்ள கணக்காய்வாளர். (ஆண்/பெண்)
தொடர்பு: 077 772 2215

## வெளிநாடு செல்வதற்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்

- Minor Education (Age limit 5 – 17 years) Both parent can go with the child
- Jobs in Canada and UK வெளிநாட்டு வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. (Farm Workers / Registered Nurse / Construction Helper / Administrative officer / Care giver/ Personal support worker - home support etc....)

Visa Consultant
NALTC - 134, Adiyapatham Road, Thirunelvely. (Hotline: 0770385584)

## DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28


# ஆண்டு இறுதிக்குள் அரசாங்கம் அரசியல் தீர்வை வழங்கவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 6
காலத்தை இழுத்தடிக்காமல் மூவின மக்களும் ஏற்கும் அரசியல் தீர்வை இவ்வருடத்துக்குள் அரசு வழங்கியே தீரவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.
தேர்தல் என்று கூறி அரசியல் தீர்வுக்கான சர்வகட்சிப் பேச்சைப் புறக்கணிக்கவோ அல்லது அந்தப் பேச்சை ஒத்திவைக்கவோ முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டங்களில் நானும் பங்கேற்றேன். அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சியினரும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளனர், இது வரவேற்கத்தக்கது. ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பில்தான் ஒவ்வொரு கட்சியினரும் வெவ்வேறு நிலைப்பாடுகளில் உள்ளனர்.
ஜனாதிபதி கூறியதுபோல் அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள், முரண்பாடுகள் இல்லாத ஒருமித்த முடிவை எடுக்கவேண்டும் - என்றார்.



(அ-ஒ.22)

# காணி விற்பனைக்கு


யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்புக் காணி விற்பனைக்கு.
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
076 755 8606
074 318 7263,076 436 5814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.